இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 07-02-2025

# ஆளுநருக்கு பிரதமர் புத்திமதி

யார் பேச்சையும் கேட்காமல் ஆடிக் கொண்டிருக்கும் ஆளுநர் ரவியை, உச்சந்தலையில் ஓங்கிக் கொட்டி புத்திமதி சொல்லி இருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி.

மாநில அரசு தயாரித்துத் தரும் உரையை வாசிக்காமல் முரண்டு பிடித்துக் கொண்டிருப்பவர் ஆளுநர் ரவி என்பது அனைவருக்கும் தெரியும். அவருக்கு நாடாளுமன்றத்தில் அறிவுரை - கண்டிப்பு - உத்தரவு - கட்டளை போடும் வகையில் சில சொற்களை உதிர்த்துள்ளார் மாண்புமிகு பிரதமர் அவர்கள். **“மாநில சட்டமன்றத்தில் அரசு கொடுக்கும் உரையை ஆளுநர்கள் வாசிப்பது, நமது நாட்டின் மிகப்பெரிய பாரம்பரியம்”** என்று பிரதமர் மோடி அவர்களே சொல்லி விட்டார்கள்.

குடியரசுத் தலைவர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய பிரதமர் மோடி, **“ஒன்றிய அரசு தயாரித்து வழங்கிய உரையை மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்கள் இந்த அவையில் வாசித்தார்கள். மாநில சட்டமன்றங்களில் அந்தந்த மாநில அரசுகள் வழங்கும் உரையை ஆளுநர்கள் வாசிப்பதும் நாட்டின் மிகப்பெரிய பாரம்பரியம் ஆகும். குஜராத்தில் நான் முதலமைச்சராக இருந்த போது எங்கள் அரசு தயாரித்து அளித்த உரையை காங்கிரஸ் ஆளுநர்கள் வாசித்தார்கள்”** என்று மாண்புமிகு பிரதமர் அவர்கள் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிட்டார்கள். இதை விட வெளிப்படையான புத்திமதியை பிரதமரால் சொல்ல முடியாது.

மாநில அரசுக்குக் கட்டுப்பட்டு ஆளுநர் செயல்பட வேண்டும் என்ற உண்மையை பிரதமர் மோடியே ஒப்புக்கொண்டுள்ள நிலையில், இனி என்ன சொல்லப் போகிறார் ஆளுநர் ரவி?

**“இந்த நீதிமன்றம் எத்தனையோ விசித்திரமான வழக்குகளைப் பார்த்திருக்கிறது’ - என்று ‘பராசக்தி’ படத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் ஒரு வசனத்தை எழுதி இருப்பார்கள். இந்தச் சட்டமன்றமும் கடந்த சில ஆண்டுகளாக விசித்திரமான காட்சிகளைக் கண்டு வருகிறது. உரையாற்ற வருகிறார் மாண்புமிகு ஆளுநர். ஆனால் உரையாற்றாமல் போய்விடுகிறார். அதனால்தான் ஆளுநரின் செயல்பாடுகளை நான் சிறுபிள்ளைத்தனமானது என்று சொன்னேன்”** என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதைச் சுட்டிக் காட்டி, ‘ஆணவம்’ என்று விமர்சித்து அறிக்கை வெளியிட்டு இருந்தார் ஆளுநர் ரவி. இன்றைக்கு அவரது நடத்தையை பிரதமர் அவர்களே விமர்சித்து விட்டார்கள். பிரதமரையும் ஆணவக்காரர் என்பாரா ரவி?

ஆளுநர்களாக வருபவர்களுக்கு இருக்கும் ஒரே வேலை, ‘அரசு தயாரித்துத் தரும் உரையை ஆண்டுக்கு ஒரே ஒரு முறை வாசிப்பது’ ஆகும். அதைக் கூட ரவி செய்யாமல் அடம்பிடித்தார்.

2021 ஆம் ஆண்டு ஆர்.என்.ரவி ஆளுநராக வந்தார். 2022 ஆம் ஆண்டு தனது முதல் உரையை முழுமையாக வாசித்தார். எதையும் மாற்றவில்லை.

2023 ஆம் ஆண்டு உரையில் இருந்த பெரியார், அம்பேத்கர், கலைஞர் ஆகிய பெயர்களை விட்டுவிட்டு வாசித்தார். சுயமரியாதை, மதச்சார்பின்மை, மகளிர் முன்னேற்றம் ஆகிய சொற்களையும் விட்டுவிட்டு வாசித்தார். அரசு கொடுத்த உரையில் இருப்பது முழுமையாக அவைக் குறிப்பில் ஏறும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்மானம் கொண்டு வந்தார். தீர்மானம் நிறைவேறியதும், தேசிய கீதம் பாடப்பட்டது.

தேசிய கீதத்தை அவமதிக்கும் வகையில் அவையில் இருந்து வெளியேறினார் ஆளுநர். இதுவரை எந்த மாநில ஆளுநரும் இந்த மாதிரி தேசிய கீதத்தை அவமானப்படுத்தியது இல்லை. என்ன கோபம் இருந்தாலும் தேசியகீதத்துக்கு மரியாதை செலுத்தும் வகையில் எழுந்து நின்று மரியாதை செலுத்தி விட்டுச் செல்ல வேண்டும் என்ற அடிப்படை நெறிகூடத் தெரியாத ஆளாக ரவி நடந்து கொண்டார்.

2023 ஆம் ஆண்டு தேசிய கீதத்தை அவமதித்த அதே ஆளுநர், 2024 ஆம் ஆண்டு, ‘தமிழ்த்தாய் வாழ்த்துதான் பாடுகிறீர்கள், தேசிய கீதம் பாடவில்லை’ என்று ஒரு காரணம் சொன்னார். ஆளுநர் உரையின் தமிழ் வடிவத்தை அவைத்தலைவர் வாசித்தார். ஆளுநர் அமைதியாக பார்த்துக் கொண்டே இருந்தார்.

2025 ஆம் ஆண்டின் தொடக்கமான கடந்த மாதம், வந்தார் ஆளுநர். பேரவையின் காவல் அணிவகுப்பு மரியாதையை வாங்கினார். உள்ளே வந்து உட்கார்ந்தார். எல்லார் முகத்தையும் பார்த்துவிட்டு, அவராகவே போய்விட்டார். இந்த காமெடி வேறு எந்த மாநிலத்திலும் பார்க்க முடியாதது ஆகும்.

பேரவை தொடங்கும் போது தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதும் - அவை நடவடிக்கைகள் முடியும் போது தேசிய கீதம் ஒலிப்பதும்தான் நடைமுறை மரபு என்பதை எத்தனை தடவைகள் சொன்னாலும் அதனைப் புரிந்து கொள்ளும் தன்மை கொண்டவராக ஆளுநர் இல்லை.

**உண்மையான காரணம் தேசிய கீதம் அல்ல. திராவிட மாடல் என்பதுதான் ஆளுநரை தூங்கவிடாமல் செய்கிறது. அதனை வாசிப்பதுதான் அவருக்கு வலிக்கிறது. பெரியார், அம்பேத்கர், கலைஞர், சுயமரியாதை, மதச்சார்பின்மை, மகளிர் முன்னேற்றம் ஆகிய சொற்களைச் சொல்லவே அவருக்கு வாய் வலிக்கிறது. தமிழ்நாடு அனைத்து வகையிலும் முன்னேறி வருகிறது என்பதைச் சொல்லும் போது அவருக்கு நெஞ்சு அடைக்கிறது.**

**அந்த நெஞ்சு அடைப்பை சரி செய்வதாக பிரதமர் மோடியின் புத்திமதி அமைந்துள்ளது.**

## கழக மாணவரணி சார்பில் டெல்லியில் போராட்டம்!

# யு.ஜி.சி. வரைவு திருத்த விதிகளை திரும்பப் பெறக்கோரி முழக்கம்!

### ராகுல்காந்தி – அகிலேஷ் யாதவ் உள்ளிட்ட கட்சித் தலைவர்கள் – எம்.பி.க்கள் – மாணவர் அமைப்பினர் பங்கேற்பு!



**புதுடெல்லி, பிப். 7 -**

**தி.மு.க. மாணவரணி சார்பில் ஜந்தர் மந்தரில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஒன்றிய அரசின் யு.ஜி.சி., வரைவு திருத்த விதிகளை கண்டித்து முழக்கம் எழுப்பினர். ‘இந்தியா’ கூட்டணிக் கட்சியினர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு கண்டனம் தெரிவித்தனர்.**

யு.ஜி.சி., வரைவு திருத்த விதிகளை கண்டித்து டெல்லியில் திமுக மாணவரணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில், ராகுல் காந்தி உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.,க்கள் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

பிரதமர் மோடி தலைமையிலான ஒன்றிய பா.ஜ.க., அரசு, யு.ஜி.சி., வரைவு திருத்த விதிகளை கொண்டு வந்துள்ளது. இதனால் பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமனம் செய்யும் மாநில அரசுகளின் உரிமை பறிக்கப்பட்டுள்ளது. இதற்கு கடும் கண்டனம் எழுந்துள்ளது. தமிழ்நாடு சட்டப்பேரவையில் யு.ஜி.சி., வரைவு திருத்த விதிகளுக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவுப்படி யு.ஜி.சி., வரைவு திருத்த விதிகளை கண்டித்தும், வரைவு திருத்த விதிகளை திரும்ப பெற வலியுறுத்தியும் டெல்லி ஜந்தர் மந்தரில் தி.மு.க. மாணவரணி சார்பில் நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில், நாடாளுமன்ற திமுக குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா, தி.மு.க. மாணவரணி தலைவர் சி.வி.எம்.பி. எழிலரசன் மற்றும் மக்களவை, மாநிலங்களவை தி.மு.க. எம்.பி.க்கள், மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் யாதவ், திரிணாமுல் காங்கிரஸ் கட்சி சார்பில் சுதீப் பந்தோ பாத்யாயா, ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சி சார்பில் மனோஜ் குமார் ஜா, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஜான் பிரிட்டாஸ், ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்.திருமாவளவன், புரட்சிகர சோஷியலிஸ்ட்டின் பிரேம சந்திரன், கம்யூனிஸ்ட் கட்சிகள் சார்பில் சுப்பராயன், செல்வராஜ் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சியினர் மற்றும் பல்வேறு மாணவர் அமைப்பினர் கலந்து கொண்டு ஒன்றிய அரசுக்கு எதிராக முழக்கம் எழுப்பினர்.

**ஒன்றிய அரசுக்கு ராகுல் கண்டனம்!**

இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய ராகுல்காந்தி, ஒரே நாடு, ஒரே மொழியை கொண்டு வர ஒன்றிய பா.ஜ.க., அரசு முயற்சி செய்து வருவதாக கண்டனம் தெரிவித்தார். பல மொழிகள் ஒன்றிணைந்ததுதான் இந்தியா என்றும் அவர் கூறினார். இந்திய அரசியலமைப்பை சிதைக்க மோடி அரசு முயற்சிப்பதாகவும், இந்திய நாட்டின் வரலாற்றை அழிப்பதே ஆர்.எஸ்.எஸ்., அமைப்பின் இலக்காக உள்ளதாகவும் ராகுல் காந்தி விமர்சித்தார். யு.ஜி.சி., வரைவு திருத்த விதிகள் மூலம் துணைவேந்தர் நியமனத்தில் மாநில அரசின் உரிமையை ஒன்றிய அரசு பறிப்பதாகவும் ராகுல் கண்டனம் தெரிவித்தார்.

பா.ஜ.க.வினர் இந்திய அரசியலமைப்பு மீது தாக்குதல் நடத்தி வருகின்றனர். ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம் என்பதை நாடு முழுவதும் கொண்டு வர வேண்டும் என்பது தான் பா.ஜ.க.வினரின் எண்ணம் இதே போல் கல்வித்துறை நிர்வாகத்திலும் பா.ஜ.க. அரசு கொண்டு வர முயற்சிக்கிறது. புதிய கல்விக் கொள்கையை பா.ஜ.க. திணிக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திற்கும் தனித்தனியே கலாச்சாரம், மொழி உள்ளது. அதனால் தான் அரசியலமைப்பில் மாநிலங்களின் கூட்டமைப்பு இந்தியா என கூறப்பட்டுள்ளது. தமிழர்களுக்கு 3000-4000 ஆண்டுகால கலாச்சாரம், மொழி ஆகியவை உள்ளது. புதிய கல்விகொள்கையை திணித்து தமிழர்களை அவமானப்படுத்தியுள்ளது ஒன்றிய பா.ஜ.க. அரசு என ராகுல் காந்தி கூறினார்.

**இந்தியா கூட்டணி கட்சியினர் முழக்கம்!**

ஆர்ப்பாட்டத்தில் பேசிய இந்தியா கூட்டணி கட்சியினர், மாணவர்களின் கல்வி உரிமையையும், மாநில உரிமையையும் காத்திடுவோம் என்று தெரிவித்தனர். யு.ஜி.சி.யின் அதிகார அத்துமீறலை முறியடிப்போம் என்றும் அவர்கள் உறுதிபட கூறினர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பேசிய சமாஜ்வாதி கட்சி தலைவர் அகிலேஷ், மாநில அரசுகளின் உரிமைகளை பறிக்கும் முயற்சியில் ஒன்றிய பா.ஜ.க. ஈடுபட்டுள்ளது மாநிலங்களில் உள்ள அரசியல் தலைவர்களை, தொழிலதிபர்களுக்கு பணி செய்ய ஒன்றிய பா.ஜ.க. முயல்கிறது எனவே, புதிய கல்விக்கொள்கைக்கு நாங்கள் எப்போதும் ஆதரவளிக்க மாட்டோம்.

தி.மு.க. இளைஞரணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கு நன்றி கூறுகிறேன். டெல்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தி பல கல்லூரி மாணவர்களுக்கு முன்னுதாரணமாக திகழ்கின்றனர் என்றார்.

# கீழடி அகழ்வாராய்ச்சி அறிக்கைகள் எப்போது வெளியிடப்படும்?

### மக்களவையில் – கனிமொழி கருணாநிதி கேள்வி!

**புதுடெல்லி, பிப்.7–**

**கீழடியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சி அறிக்கைகள் எப்போது வெளியிடப்படும் என திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எழுப்பிய கேள்விக்கு, ஒன்றிய கலாச்சாரத்துறை அமைச்சர் பதிலளித்துள்ளார்.**

கனிமொழி கருணாநிதி அவர்கள் எழுப்பிய கேள்வி வருமாறு:

“தமிழ்நாட்டில் சிவகங்கை மாவட்டம் கீழடியில் மேற்கொள்ளப்பட்ட முதல் கட்ட, இரண்டாம் கட்ட அகழ்வாராய்ச்சி அறிக்கைகள் எப்போது வெளியிடப்படும்;

2014 மற்றும் 2016 க்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் அறிக்கைகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டதற்கான காரணங்கள் என்ன?

கடந்த பத்து ஆண்டுகளில் நாடு முழுவதும் ஒன்றிய அரசு மேற்கொண்ட தொல்பொருள் அகழ்வாராய்ச்சிகளின் விவரங்கள் மற்றும் அத்தகைய அகழ்வாராய்ச்சிகளின் அறிக்கைகள் வெளியிடப்பட்ட தேதி ஆகிய விவரங்கள் தேவை” என்று தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், கழக நாடாளுமன்றக் குழுத் தலைவரான கனிமொழி கருணாநிதி எழுத்துபூர்வமாக கேள்விகள் கேட்டிருந்தார்.

இந்தக் கேள்விக்கு ஒன்றிய கலாச்சாரம் மற்றும் சுற்றுலா அமைச்சர் கஜேந்திர சிங் ஷேகாவத் எழுத்துபூர்வமாக அளித்த பதிலில்,

“தொல் பொருட்களின் காலகட்டங்கள் மற்றும் பல்வேறு மிச்சங்களை கண்டுபிடிப்பதற்காக அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த அறிக்கைகளை உறுதிப்படுத்திட வெவ்வேறு ஆய்வகங்களில் விரிவான அறிவியல் ஆய்வு மற்றும் பகுப்பாய்வு தேவைப்படுகின்றன, இதற்கு பெரும்பாலும் நேரம் எடுக்கும்.

கீழடியில் 2014 முதல் 2016 வரை நடத்தப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் குறித்த அறிக்கை 2023 இல் சமர்ப்பிக்கப்பட்டது. அறிக்கையை வெளியிடுவதற்கு, நிபுணர்களால் முழுமையான பரிசோதனையை உள்ளடக்கிய உரிய செயல்முறை பின்பற்றப்பட்டு வருகிறது.



கடந்த பத்து ஆண்டுகளில் நாடு முழுவதும் இந்திய தொல்பொருள் ஆய்வு (ASI) நிறுவனத்தின் பல்வேறு கள அலுவலகங்களால் 82 இடங்களில் அகழ்வாராய்ச்சிகள் நடத்தப்பட்டன. தமிழ்நாட்டில் 2015-16, 2016-17 களில் சிவகங்கை மாவட்டம் கீழடியிலும், 2017-18 இல் ஈரோடு மாவட்டம் கொடுமணலிலும், 2021-22 மற்றும் 2022-23 ஆகிய ஆண்டுகளில் தூத்துக்குடியில் உள்ள ஆதிச்சநல்லூரிலும், 2022-23 மற்றும் 2023-24 ஆம் ஆண்டில் காஞ்சிபுரம் மாவட்டம் வடக்கப்பட்டிலும், 2024-25 இல் செங்கல்பட்டு, கொடும்பலூர் ஆகிய இடங்களிலும் தொல்பொருள் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

சில அகழ்வாராய்ச்சிகள் விரிவான அளவில் மேற்கொள்ளப்படுவதால் அவை பல ஆண்டுகள் நீடிக்கும். அவற்றின் குறிப்பிட்ட பருவத்தின் பணிகள் முடிந்தவுடன் அவ்வப்போது அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன.

சலுவன்குப்பம், சுபரேய், பர்சோஹோம், பைதான், கலிபங்கன், லலித்கிரி, தலேவன், ஆடம் மற்றும் ஹூலாஸ் ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகள் குறித்த இறுதி அறிக்கைகள் விரிவான ஆய்வு மற்றும் அறிவியல் பகுப்பாய்வு முடிக்கப்பட்டு கடந்த பத்து ஆண்டுகளில் வெளியிடப்பட்டுள்ளன.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் பதிலளித்துள்ளார்.

### அமெரிக்காவிலிருந்து இந்தியர்கள் கைவிலங்கிட்டு அழைத்து வரப்பட்ட விவகாரம்!

# நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த எதிர்க்கட்சிகள் கோரிக்கை!

### நாடாளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைப்பு!

*புதுடெல்லி, பிப். 7 -*

*அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்கள் கைவிலங்கிடப்பட்டு அழைத்து வரப்பட்ட விவகாரம் குறித்து விவாதம் நடத்த கோரி, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் முழக்கமிட்டதால் இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டது.*

*அமெரிக்காவில் இருந்து நாடு கடத்தப்பட்ட இந்தியர்களுக்கு கை, கால்களில் விலங்கிட்டு அழைத்து வரப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அமெரிக்காவில் சட்ட விரோதமாக குடியேறிய இந்தியர்களை வெற்றிகரமாக திருப்பி அனுப்பி இருப்பதாக அமெரிக்க எல்லை காவல்படைத் தலைவர் மைக்கேல் டபிள்யூ. பேங்ஸ் வீடியோ ஒன்றை சமூக வலை தளத்தில் வெளியிட்டுள்ளது. இதனிடையே, இந்த விவகாரம் குறித்து விவாதம் நடத்தக்கோரி காங்கிரஸ் ஒத்தி வைப்பு தீர்மான நோட்டீஸ் வழங்கியது. நாடாளுமன்ற மக்களவை நேற்று தொடங்கியதும், இது குறித்து விவாதம் நடத்த வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் வேண்டுகோள் விடுத்தனர்.*

*ஆனால் மக்களவை சபாநாயகர் அவையை தொடர்ந்து நடத்தியதால் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர். இதனால் மக்களவை 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.*

*இதே போல் மாநிலங்களவையில் எதிர்க்கட்சிகளின் கோரிக்கை ஏற்கப்படாததால், எதிர்க்கட்சியினர் முழக்கமிட்டனர். இதனையடுத்து மாநிலங்களவையும் பகல் 12 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது.*

*இதனிடையே, நண்பகல் 12 மணிக்கு மக்களவை மீண்டும் கூடியபோது, இந்தியர்களை கைவிலங்கிட்டு அமெரிக்காவில் இருந்து திருப்பி அனுப்பிய விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் வலியுறுத்தினர். ஆனால், சபாநாயகர் மறுப்பு தெரிவித்ததால், காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் முழக்கமிட்டனர்.*

*இதனையடுத்து மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. பின்னர், அவையில் இருந்து வெளியேறிய எதிர்க்கட்சியினர், இந்த விவகாரம் குறித்து விவாதம் நடத்தக்கோரி நாடாளுமன்ற வளாகத்தில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். மக்களவை எதிர்க்கட்சித்தலைவர் ராகுல்காந்தி, வயநாடு தொகுதி எம்.பி. பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.*